காரியாபட்டி அருகில் புதுப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மற்றுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மிதிவண்டிகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைக்கவும் மற்றும் புதிய திட்டப் பணிகளை அடிக்கல் நாட்டவும் வருகிற டிசம்பர் 7ஆம் தேதி மதுரை வருகை தர உள்ளதால் மதுரை கிழக்கு தொகுதி உத்தங்குடியில் உள்ள கலைஞர் திடலில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆய்வு செய்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பிரவீன்குமார், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் ஆகியோர் உடன் உள்ளனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

இராமநாதபுரம் மாவட்ட இளைஞர் அணி சார்பில் நல உதவிகள்!

மாவட்ட அமைப்பாளர் சம்பத் ராஜா அறிவிப்பு!

இராமநாதபுரம், நவ. 28 –

கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர், இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் இளைஞரணி சார்பில் நலத்திட்ட உதவிகள் மற்றும் விளையாட்டு போட்டிகள் நடைபெறுகின்றன.

இது குறித்து மாவட்ட அமைப்பாளர் கே.சம்பத்ராஜா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கே சம்பத் ராஜா மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏற்பாட்டில்

14.12.2025 அன்று இராமநாதபுரத்தில் மாநில அளவிலான செஸ் போட்டி.

மற்றும் இராமநாதபுரம் அறிஞர் அண்ணா நடுநிலைப்பள்ளி மற்றும் நகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

ரமேஷ் கண்ணா மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஏற்பாட்டில் பள்ளி மாணக்கர்களுக்கு, மதிய உணவு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

C.K. குமரகுரு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஏற்பாட்டில்

12.12.2025 அன்று நயினார் கோவில் தேவர் சிலை அருகில் 1000 பழ மரக்கன்றுகள் பொதுமக்களுக்கு வழங்குதல்

சண்.சம்பத்குமார் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஏற்பாட்டில் 01122025 அன்று பரமக்குடி நகர் சிவானந்தபுரம் நகராட்சி தொடக்கப்பள்ளி மாணக்கர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

ஆர் எஸ் சத்தியந்திரன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஏற்பாட்டில் 04.12.2025 அன்று ஏர்வாடி அரசு மனநல காப்பகத்தில் மதிய உணவு வழங்குதல். மற்றும் சேரந்தை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இனிப்பு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

ஆர்கே கோபிநாத் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஏற்பாட்டில் இராமநாதபுரம் ஒன்றியம், கமுகூரணி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவ, மாணவியருக்கு நோட்டு, புத்தகம் மற்றும் இனிப்புகள் வழங்குதல் மற்றும் கமுகூரணி ஊராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு வேட்டி, சேலை வழங்குதல்.

ச.தௌபிக் ரஹ்மான், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஏற்பாட்டில் 01.12.2025 அன்று வாலிநோக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு நோட்புத்தகம், பேனா, பென்சில் மற்றும் விளையாட்டு உபகாரணகள் வழங்குதல்,

இராமேஸ்வரம் நகர் இளைஞரணி சார்பில் ஆத்திக்காடு CSI மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மதிய உணவு வழங்குதல்.

இராமநாதபுரம் தெற்கு நகர் இளைஞரணி சார்பில் அரசு சமூக நீதி விடுதி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

கீழக்கரை நகர் இளைஞரணி சார்பில் அரசு மருத்துவமனையில் நலத்திட்ட உதவிகள் மற்றும் முத்துசாமிபுரம் தொடக்கப்பள்ளி, CSI நடுநிலை பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

திருப்புல்லாணி மேற்கு ஒன்றியம் இளைஞரணி சார்பில் புல்லந்தை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்குதல்.

திருப்புல்லாணி கிழக்கு ஒன்றியம் இளைஞரணி சார்பில் களிமண் குண்டு கிராமத்தில் படகு போட்டி.

மண்டபம் கிழக்கு ஒன்றிய இளைஞரணி சார்பில் 28, 29.11.2025 தேதிகளில் கைப்பந்து போட்டி.

மண்டபம் மத்திய ஒன்றிய இளைஞரணி சார்பில் 1). சாத்தக்கோன் வலசை பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

2). வாலாந்தரவை மன வளர்ச்சி குன்றிய முதியவர்களுக்கு மதிய உணவு வழங்குதல்.

மண்டபம் மேற்கு ஒன்றிய இளைஞரணி சார்பில்

1). இராமநாதபுரம் தங்கம் மகாலில் இரத்த தான முகாம்.

2). செஸ்ட் ஏஞ்சலின் மன வளர்ச்சி பள்ளியில் மதிய உணவு வழங்குதல்.

மண்டபம் பேரூர் இளைஞரணி சார்பாக ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

இராமநாதபுரம் வடக்கு நகர் இளைஞரணி துணை அமைப்பாளர் ஆசீர் ஆபிரகாம் ஏற்பாட்டில் புனித அந்தோனியார் துவக்கப் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

கமுதி வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சிரஞ்சீவி ஏற்பாட்டில்

01.12.2025 அன்று சிஎஸ்ஐ நேசகரங்கள் மனவளர்ச்சி குன்றியோர் பள்ளியில் மதிய உணவு வழங்குதல்.

கமுதி மத்திய ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சுரேஷ் ஏற்பாட்டில்

02.12.25 அன்று சிஎஸ்ஐ நேசகரங்கள் மனவளர்ச்சி குன்றியோர் பள்ளியில் மதிய உணவு வழங்குதல்.

கமுதி தெற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் செந்தில் ஈஸ்வரன் ஏற்பாட்டில் 05.12.2025 அன்று பெருநாழி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் இனிப்பு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குதல்

முதுகுளத்தூர் மேற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜா ஏற்பாட்டில் 06.12.2025 அன்று

கீழக்குளம் கிராமத்தில் கழக கொடியேற்றுதல் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

மற்றும் பசுமை குடில் ஆதரவற்றோர் இல்லத்தில் காலை உணவு வழங்குதல்.

கடலாடி தெற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் முரளிதரன் ஏற்பாட்டில்.10.12.2025 அன்று டலாடியில் மாட்டுவண்டி பந்தயம்

ராகுல் விஜய்

கடலாடி தெற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்

03.12.2025

பேய்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இனிப்புகள் வழங்குதல்

வில்வலிங்கம்

கடலாடி தெற்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்

03.12.2025

பாடுவனேந்தல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் இனிப்புகள் வழங்குதல்.

முதுகுளத்தூர் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் அசோக்குமார் ஏற்பாட்டில் முதுகுளத்தூர் பேருந்து நிலையத்தில் இனிப்புகள் வழங்குதல்

கமுதி பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் கரிமுல்லா ஏற்பாட்டில்

08.12.2025 அன்று கமுதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாணவர்களுக்கு இனிப்புகள் மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குதல்

சாயல்குடி கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் விக்னேஷ் ராம்

ஏற்பாட்டில் பூப்பாண்டியபுரம் அரசு நடுநிலை பள்ளியில் மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

முகமது அசாருதீன்

சாயல்குடி கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்,

ஏர்வாடி தர்ஹாவில் உன்ன மன நல காப்பகத்தில் மதிய உணவு வழங்குதல்.

கவியரசன்

சாயல்குடி கிழக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்,

ஏர்வாடி முத்தரையர் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு இனிப்பு வழங்கி விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்.

சபரி (எ) சத்திய பிரகாஷ்,

சாயல்குடி கிழக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஏற்பாட்டில்

மேலக்கிடாரம் CSI பள்ளியில் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்...

நாகரத்தினம்

சாயல்குடி மேற்கு

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஏற்பாட்டில் வெள்ளையாபுரம் அரசு தொடக்கப்பள்ளியில் மாணவர்களுக்கு இனிப்பு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் SPK முருகன் ஏற்பாட்டில் முதுகுளத்தூர் பசுங்குடியில் ஆதரவற்றோர் இல்லத்தில் மதிய உணவு வழங்குதல்.

மற்றும் பொன்னக்கனேரி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மாணவச் செல்வங்களுக்கு நோட், பேனா , பென்சில் இனிப்புகள் வழங்குதல்

அஜித் குமார்.

முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்.

பூசேரி தொடக்கப் பள்ளியில் இனிப்பு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

குருபாலா

முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்,

செங்கப்படை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

கங்கை அமரன்

முதுகுளத்தூர் கிழக்கு ஒன்றய இளைஞரணி அமைப்பாளர்,

பசுமைகுடில் கிராமத்தில் ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் மதிய உணவு வழங்குதல்

முதுகுளத்தூர் மத்திய

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்

லிங்கராஜ் மற்றும் துணை அமைப்பாளர்கள் சார்பில்

விளங்குளத்தூர் பசும் குடில் ஆதரவற்றோர் இல்லத்தில் காலை உணவு வழங்குதல்...

கடலாடி வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மாரிநாதன் மற்றும் துணை அமைப்பாளர்கள் சார்பில்

ஆப்பனூர் அரசு பள்ளியில் மாணவ மாணவியருக்கு இலவச நோட்டு புத்தகங்கள் வழங்குதல்...

M. முத்துராஜ்

சாயல்குடி கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்,

ஏர்வாடி மன நல காப்பகத்தில் காலை உணவு வழங்குதல்...

முனீஸ்வரன்

சாயல்குடி பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள்.

சாயல்குடி அரசு பள்ளியில் மாணவ மாணவியருக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்...

RV.பிரபாகரன், திருவாடானை மத்திய ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்

1: ஆதியூர் ஊராட்சி தொடக்க பள்ளியில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

2.ஒரிக்கோட்டை கருனை இல்லத்தில் மதிய அறுசுவை உணவு வழங்குதல்

3.திருவாடானை கலைஞர் திடலில் மரக்கன்று நடும் விழா நடைபெறுகிறது

ஜோ.வில்சன், திருவாடானை வடக்கு

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்

1. புனித அந்தோனியார் நடுநிலைப்பள்ளி

மாணவிகளுக்கு நோட் புத்தகம் பேனா பென்சில் வழங்கும் நிகழ்வு...

2. திருவாடானை வடக்கு ஒன்றியம் மங்கலக்குடியில் கழகக் கொடியேற்றி இனிப்புகள் வழங்கும் நிகழ்வு

அ. அம்ஜத் அலி

திருவாடானை தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்

எஸ்.பி. பட்டினம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, புத்தகம், பேனா பென்சில் வழங்குதல் மற்றும் இனிப்புகள் வழங்குதல், மற்றும்

மாவட்ட அளவிலான கபடி போட்டி.

K. பார்த்தசாரதி

ராமநாதபுரம் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்

அச்சுந்தன் வயல் ஊராட்சியில் தூய்மை பணியாளர்களுக்கு வேட்டி சேலை மற்றும் இனிப்பு வழங்குதல்

அருண்குமார்

ராமநாதபுரம் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஏற்பாட்டில் பெண்களுக்கான கபடி போட்டி

ரசாக்

ராமநாதபுரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஏற்பாட்டில் கபாடி வீரர்களுக்கு அறுசுவை உணவு வழங்குதல்

கபில்தாஸ்

ராமநாதபுரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஏற்பாட்டில் மினி மராத்தான் போட்டி.

போகலூர் மேற்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில்

1). கருத்தனேந்தல் அரசு தொடக்கப் பள்ளி மாணவ மாணவிகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்.

2). பொட்டிதட்டி அரசு நடுநிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்.

3). T.கருங்குளம் தீனியா அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளி மாணவ மாணவியருக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்.

1.12.2025

பரமக்குடி கிழக்கு ஒன்றிய இளைஞரணி சார்பாக கலையூர் ஊராட்சி. கருங்குளம் தொடக்கப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இனிப்பு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குதல்..

1.12.2025 பார்த்திபனூர் முதியோர் இல்லத்தில் உணவு வழங்குதல்.

பரமக்குடி தெற்கு நகர் இளைஞரணி அமைப்பாளர் துரை முருகன் ஏற்பாட்டில் 27112025 அன்று 48 கிலோ கேக் வெட்டி பொதுமக்களுக்கு வழங்குதல்.

மற்றும்

01.12.2025 ஆதரவற்றோர் இல்லத்தில் உணவு வழங்குதல்.

பரமக்குடி வடக்கு நகர் இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா சேதுபதி ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் 12.12.2025 அன்று

பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

அபிராமம் பேரூர் கழக இளைஞரணி சார்பாக பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு.

10.12.2025

போகலூர் கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பில் மென்னந்தி தொடக்கப்பள்ளியில் கல்வி உபகரணங்கள் வழங்குதல் மற்றும் காமன்கோட்டை ஊராட்சி, காக்க நேந்தல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்

04.12.2025

நயினார்கோவில் மேற்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பாக அஞ்சாமடை பள்ளி குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மற்றும் நயினார்கோவில் நாகநாத சுவாமி ஆலயத்தில் முதியோர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு.

04.12.2025

நயினார் கோவில் கிழக்கு ஒன்றிய இளைஞரணி சார்பாக வாகவயல் மற்றும் குண்டத்தூர் குணங்குளம் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல். மரக்கன்றுகள் நடும் நிகழ்வு.

ஆர்.எஸ்.மங்கலம் தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பொன்னுத்துரை ஏற்பாட்டில், பாரனூர் ஊராட்சி கைலாசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி குழந்தைகளுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல்.

ஆர்.எஸ்.மங்கலம் தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஜெயவீர முத்தையா ஏற்பாட்டில் 48 நரிக்குறவர் குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்.

இவ்வாறு சம்பத்ராஜா தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு விருதுநகர் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு சார்பாக 1000 பொதுமக்களுக்கு உணவு வழங்கினார். உடன் நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், மாவட்டத் துணைச் செயலாளர் ஏ.ஆர்.சுவேதா, நகர அவைத் தலைவர் ராம காசிராஜன், துணைச் செயலாளர் ஏ.எஸ்.கே.ரமேஷ் குமார், ஆ.மரியராசு, அலுவலக அணி மா.பாரத், பொறியாளர் அணி மதன்குமார் ஆகியோர் இருந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தங்கச்சியம்மாபட்டி ஊராட்சி இடும்பக்குடும்பம் பட்டியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார் இந்நிகழ்வில் ஒன்றிய செயலாளர் எஸ். ஆர்.கே.பாலு, அவை தலைவர் செல்வராஜ், ஒன்றிய துணைச் செயலாளர்கள் முருகானந்தம், சிவபாக்கியம் ராமசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில்,

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் 49வது பிறந்த நாள் விழா!

நலஉதவிகள் வழங்கி, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை!

திருவண்ணாமலை, நவ. 28 -

திருவண்ணாமலை மாநகர திமுக சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாள் விழா நடைபெறவுள்ளது. விழாவில் கலந்து கொண்டு, நலஉதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

28.11.2025 வெள்ளிக்கிழமை மாலை 6.00மணிக்கு, திருவண்ணாமலை மாநகரம், கீழ்நாத்தூர் அற்புதமாதா கோவில் அருகில், திருவண்ணாமலை மாநகர திமுக சார்பில், கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சரும், திராவிடத்தின் திருவிளக்கு உதயநிதிஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. பொதுக்கூட்டத்திற்கு மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் தலைமை வகிக்கிறார்.

ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், மாநகர பகுதி செயலாளர்கள் விஜி (எ) சு.விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, லயன் பா.ஷெரீப் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநகர பகுதி செயலாளர் சி.சண்முகம் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு நலஉதவிகள் வழங்கி பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

பொது கூட்டத்தில் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் பிரியா ப.விஜய ரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், தொ.மு.ச., மாநில துணை செயலாளர் க.சௌந்தர ராசன், செய்தி தொடர்பு இணைச் செயலாளர் சிவ. ஜெயராஜ். மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ.ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன்.தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர். பிரவீன்ஸ்ரீதரன், சி.பி.பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி.துவேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம்,

ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி ஆறுமுகம், சி.சுந்தபாண்டியன், ப.கேசவன், கோ. ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், செங்கம் நகரச் செயலாளர் மு.அன்பழகன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, அ.தண்டபானி, க.பிரபாகரன், கா.சு.இளங்கோவன், அன்பரசி ராஜசேகர்,

பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, பா.முருகையன், எம்.சீனுவாசன், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், பேரூராட்சி மன்ற தலைவர்கள் கோ.சரவணன், கௌரி நடராஜ், செல்வபாரதி மனோஜ்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.தீலிப்குமார், மாநகர நிர்வாகிகள் மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகா விஜயராஜ், இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு எஸ்.பிரபு, ஹக்கிம் சேட், மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நகர அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உட்பட பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

நிறைவாக வட்ட செயலாளர் பி.ஆர்.நாகராஜ் நன்றி கூறுகின்றார். முன்னதாக மு.அம்பேத்கர் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியத்தில் உள்ள 60 சத்துணவு மையங்களுக்கு எரிவாயு அடுப்புகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன் , பிரபா சங்கர் உள்ளனர்.

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா அரசு போக்குவரத்துக் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் அரசு போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகம் விழுப்புரம் வாயில் முன்பு பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் விழுப்புரம் பொதுச் செயலாளர் வி.சேகர் தலைமை தாங்கினார் அமைப்பு செயலாளர் R வேலு துணை தலைவர் கங்காதுரை துணை பொதுச் செயலாளர் மணோகரன் சங்கர் தலைமை நிலைய செயலாளர் ஆறுமுகம் இணை செயலாளர் ராஜேந்திரன் ESசெந்தில்குமார், ஜெயமணி மற்றும் விழுப்புரம் கிளை 123 மத்திய பணிமனை, தலைமை அலுவலக, கிளை நிர்வாகிகள் ஏராளமான உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.